17

# சீஷத்துவத்திற்கு அழைப்பு

## லூக்கா 5:1–11, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*"சீஷன்" என்பது, இயேசுவைப் பின்பற்றுபவர்களுக்கு வேதாகமத்தில் மிகப் பொதுவாகப் பயன்படுத்தப்படும் சொற்றொடர்களில் ஒன்றாக உள்ளது (மத். 5:1; 8:21, 23; 9:19; அப். 6:1, 2, 7; 9:1). "சீஷன்" என்பது "கற்றுக் கொள்பவர்" என்று அர்த்தப்படுகிற கிரேக்க வார்த்தையின் மொழி பெயர்ப்பாக உள்ளது.[1] சீஷன் என்றால், ஒரு போதகரைப் பின்பற்றுகின்ற (மத். 16:24), போதகரிடமிருந்து கற்றுக் கொள்ளுகின்ற (மத். 11:29) மற்றும், பின்பு போதகரின் கட்டளைகளைப் பின்பற்றுகின்ற (யோவா. 8:31) ஒருவராயிருந்தார் என்பதே இதன் முழுக் கருத்தமைவாக உள்ளது. போதகர்/சீஷன் ஆகியோருக்கிடையில் ஒரு நெருக்கமான உறவுமுறை நிலவிற்று. ஒரு உண்மையான சீஷன் தனது போதகரைப் போல் ஆனார் (மத். 10:25அ).*

*"சீஷத்துவத்திற்கு அழைப்பு" என்ற இந்தப் பிரசங்கத்திற்கு, லூக்கா 5:1-11 நமது வேத பாடப்பகுதியாக உள்ளது,[2] இது இயேசு பேதுருவையும் அவரது நண்பர்களையும் அழைத்த நிகழ்ச்சி பற்றிக் கூறுகிறது. நமது பாடத்தின்போது, நாம் சீஷத்துவத்திற்குத் தேவையான விஷயங்கள் சிலவற்றைக் கண்டறிவோம்.*

### நீங்கள் சிலவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டும் (வ. 1-3)

*நீங்கள் இயேசுவின் சீஷராயிருக்க வேண்டுமென்றால், நீங்கள் சிலவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டும் நீங்கள் கர்த்தரால் அறிவுறுத்தப் படுவதற்கு மனவிருப்பமுள்ளவராக இருக்க வேண்டும். சிலர், எல்லாம் அறிந்த எண்ணப்போக்குடையவர்களாக, "எவரொருவரும் எனக்கு ஏதொன்றையும் போதிக்க முடியாது" என்று கூறுகின்றார்கள். நீங்கள் செவிகொடுக்கவும் கற்றுக் கொள்ளவும் தயாராக இல்லாதவரையிலும் நீங்கள் கிறிஸ்துவின் சீஷராயிருக்க முடியாது. இதன் முக்கியத்துவமானது நமது வேதபாடப்பகுதியில் காணப்படும்.*

*இந்த வரலாறு தொடங்குகையில், இயேசு கலிலேயாக் கடலின் அருகில் பிரசங்கித்துக் கொண்டிருந்தார்.[3] அருகில் சீமோன் பேதுரு தமது மீன்பிடிக்கும் படகுடன் தமது வலைகளைச் சுத்தம் செய்து கொண்டிருந் தார். அவரும் அவரது கூட்டாளிகளும் இரவு முழுவதும் மீன்பிடிக்க முயற்சி செய்திருந்தார்கள், ஆனால் காண்பிப்பதற்கு அவர்களிடம் சோர்வடைந்த*

*உடல்களும் அழுக்கான வலைகளும் மட்டும் இருந்தன. பேதுரு தமது தலையை ஒருபுறமாய்த் தொங்கவிட்டவராக, அவரது விரல்கள் வலையின் முடிச்சிட்ட சதுரங்களில் இருந்த களைகளையும் சேற்றையும் இலாகவமாக நீக்கிக் கொண்டிருக்க, இயேசு கூறுவதைக் கவனித்துக் கொண்டிருந்ததை என்னால் காண முடிகிறது. இது அந்த மீனவர் இயேசுவை எதிர்கொண்ட முதல் நிகழ்ச்சியாக இருக்கவில்லை. அவர் யூதேயாவில் கிறிஸ்துவுடன் பயணம் செய்திருந்தார். ஆயினும், கலிலேயா மாகாணத்திற்குத் திரும்பிய பின்பு, அவர் தமது முந்திய தொழிலுக்குத் திரும்பியிருந்தார்.*

*இயேசு பிரசங்கிக்கையில், கூட்டம் தொடர்ந்து வளர ஆரம்பித்தது. ஆர்வத்துடன் கவனித்தவர்கள் கிறிஸ்துவைச் சுற்றிக் கூட்டமாகக் கூடி, அவரது மிதியடிகளில் தண்ணீர் மோதும் வரையிலும் அவரை கடலின் அருகாக நெருக்கி நெருக்கி பலவந்தமாய்க் கிட்டிச் சேர்ந்தார்கள். அவர் பேதுருவின் படகினுள் ஏறி அமர்ந்து, படகைக் கடலினுள் செலுத்தும்படி அந்த மீனவரைக் கேட்டுக் கொண்டார். அங்கு, பிரசங்க மேடையாக்கப் பட்ட படகின் மேல்தட்டில் அமர்ந்தவாறு இயேசு தமது உரையைத் தொடர்ந்தார்.*

*பேதுரு படகின் நடுவில் அமர்ந்தவாறு, அதை நிலைப்படுத்திக் கொண்டு இருக்கையில் என்ன செய்து இருப்பார் என்று நீங்கள் நினைக்கின் றீர்கள்? அவர் கவனித்துக் கொண்டிருந்தார். எதைக் கவனித்துக் கொண்டிருந்தார்? இயேசு "தேவ வசனத்தைப்" பிரசங்கித்தார் என்று நமது வேதபாடப் பகுதி (லூக். 5:1) கூறுகிறது. நீங்கள் வசனத்தின் மாணவரா யிராமல் கர்த்தருக்குச் சீஷராக இருக்க முடியாது. இயேசு, "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்" (மத். 11:29) என்று கூறினார். தங்களைச் சீஷர் என்று உரிமைகோரிக் கொள்ளுகின்ற சிலர், ஆண்டுக்குப் பின் ஆண்டாக வேதாகமத்தை அறியாமல் இருக்கின்றார்கள் - ஆனால் நீங்கள் எழுதப்பட்ட வசனத்தில் காணப்பட்டபடியாக சத்தியத்தின் தீவிரமான மாணவராகாமல் அவரது சீஷராக முடியாது!*

## *நீங்கள் சிலவற்றைப் புரிந்துகொள்ள வேண்டும் (வ. 3-8)*

*கடைசியில், இயேசு தமது பிரசங்கத்தை முடித்தார். அவர் கூட்டத் தாருக்கு அதை முடித்திருந்தார், ஆனால் பேதுருவுக்கு இன்னும் அவர் பிரசங்கித்து முடிக்காதிருந்தார். பேதுரு சாத்தியமாகுதல் அதிகம் கொண்டிருந்தார், ஆனால் அவர் கற்றுக்கொள்ள வேண்டியதும் அதிகமாக இருந்தது. இது அவருக்கு அடுத்த பாடத்திற்கான வேளையாக இருந்தது. ஒருபோதும் பழமைவாதம் இல்லாத போதகரான இயேசு, எதிர்பாராத ஒன்றைச் செய்தார். அவர் சீமோனிடத்தில், "ஆழத்திலே தள்ளிக்கொண்டு போய், மீன்பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள்" என்று கட்டளையிட்டார் (வ. 4).*

கலிலேயாக் கடலில் இருந்த ஒவ்வொரு நல்ல மீனவரும் அறிந்திருந் ததைப் பேதுருவும் அறிந்திருந்தார். மீன்கள் உணவு உண்ண வரும் இரவு வேளையே மீன்பிடிக்கும் நேரமாயிருந்தது, பகல் காலம் மீன் பிடிக்க ஏற்ற வேளையல்ல. ஆழமற்ற பகுதிதான் மீன்பிடிக்க ஏற்ற இடமே தவிர, ஆழமான பகுதி அதற்கேற்ற இடமல்ல. மற்றும், அங்கு மீன்கள் இருந்த போது அவரது பிரயாசமானது - வெற்றியின்றி பத்து அல்லது அதற்கு மேற்பட்ட மணி நேரங்கள் முயற்சி செய்த பின்பு அல்ல, இரவு முழுவதும் விழித்திருந்து சக்தி தீர்ந்த பின்பு அல்ல - வலிந்து பெறப்பட வேண்டியதாயிருந்தது.

அனுபவமுள்ள, கடினமாய் வேலை செய்கின்ற, வெற்றி நிறைந்த மீனவர் என்ற வகையில், சீமோனுக்கு, எவ்வாறு மீன்பிடிக்க வேண்டும் என்று ஒரு தச்சர் (மாற். 6:3) கூறுதல் என்பது வெறுப்பின் தொடுதலாக இருந்திருக்க வேண்டும். (ஒருக்காலும் பிரசங்கித்திராதவர்கள் என்னிடத்தில் அது எவ்வாறு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று கூறும்போது நான் வெறுப்புணர்வை அடைந்துள்ளேன் என்று இவ்விடத்தில் அறிக்கை இடுகின்றேன்.) பேதுருவின் பதில் இதைச் சுட்டிக் காண்பித்திருக்கலாம்: “ஐயரே, இரா முழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்பட வில்லை ...” (வ. 5அ).

ஆயினும் அதைத் தொடர்ந்து வந்த வார்த்தைகளைக் கவனியுங்கள்: “ஆகிலும் ... .” “... ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன்” (வ. 5ஆ). KJV யில் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தைகளை நான் விரும்புகின்றேன்: “இருந்தாலும்.” வேறு வார்த்தைகளில் சொல்லுவ தென்றால், “நாங்கள் இரவு முழுவதும் முயற்சி செய்தும் வெற்றி கிடைக்க வில்லை ... இருந்தாலும் ... நான் மீண்டும் முயற்சி செய்ய வேண்டும் என்று நீர் கூறினால், நான் அதைச் செய்வேன். அது பத்தாண்டுகளுக்கும் மேலாக மீன் பிடித்தலில் நான் கற்றுக்கொண்ட எல்லாவற்றிற்கும் எதிரானதாக இருக்கலாம், ஆனால் நான் செய்யும்படி நீர் கூறும் செயலை நான் செய்வேன்.”

பேதுரு இவ்விதமான எண்ணப்போக்கை எவ்வாறு கொண்டிருக்க முடிந்தது? இதற்கான பதில், அவர் இயேசுவை விளித்த/அழைத்த பட்டப்பெயரில் காணப்படுகிறது: “ஐயரே”/“எஜமானரே.” மூல வசனத்தில், இது “எஜமானர்” அல்லது “கர்த்தர்” என்பதற்கான வழக்கமான வார்த்தையாக இல்லை.[4] இது லூக்காவினால் மட்டும் பயன்படுத்தப்பட்ட விசேஷித்த வார்த்தையாக உள்ளது, இது இயேசுவுக்கு மட்டுமே பயன் படுத்தப்பட்ட ஒரு பட்டபெயராக உள்ளது (லூக். 8:24, 45; 9:33, 49, 17:13). இது “நிற்குதல்” என்பதற்குரிய வார்த்தையுடன் “மேலாக” என்பதற்குரிய வார்த்தையை இணைத்த ஒரு கிரேக்கக் கூட்டு வார்த்தையாக உள்ளது. இது “மேலாக நிற்கின்ற ஒருவர்” - இன்னொருவர் மீது முழுமையான அதிகாரம் கொண்டுள்ள ஒருவர் - என்பதைக் குறிக்கிறது. பேதுரு இயேசுவின் அதிகாரத்தை ஒப்புக்கொண்டாரா இல்லையா என்பது முக்கியமானதாக இருக்கவில்லை. இயேசு ஒரு எஜமானராக இருந்தார், பேதுரு அவருக்கு அடிமையாக இருந்தார்; அவர் கீழ்ப்படியத் தயாரானார்.

நாம் இயேசுவின் சீஷராயிருந்தால், நாம் சிலவற்றைப் புரிந்துகொள்ள வேண்டும்: அவர் நமது எஜமானராக இருக்கின்றார் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நாம் எஜமானருக்கு அறிவுறுத்துவதில்லை; அவரே நமக்கு அறிவுறுத்துகின்றார். நாம் எவற்றைச் செய்வோம் எவற்றைச் செய்ய மாட்டோம் என்று நாம் அவருக்குக் கூறுவதில்லை; நாம் எவற்றைச் செய்ய வேண்டும் என்று அவரே நமக்குக் கூறுகின்றார். "எஜமானர்" என்பது பலம் வாய்ந்த வார்த்தையாக உள்ளது. எஜமானர் ஆலோசனைகள் தருவதில்லை; எஜமானர் அறிவுரை தருவதில்லை; எஜமானர் கட்டளைகள் தருகின்றார் - இவைகள் கேள்வியெதுவுமின்றி கீழ்ப்படியப்பட வேண்டிய கட்டளையாக உள்ளன.

ஒருவேளை பேதுரு படகை ஆழமான தண்ணீருக்குள் கொண்டு சென்ற வேளையில் தம்மை மதியீனராக உணர்ந்திருக்கலாம். அவர் தமது வலைகளை வீசுகையில் சற்றே சங்கடம் அடைந்திருக்கலாம். கரையிலிருந்த பிற மீனவர்கள் சிரிப்பதை அவர் காதுகளில் கேட்டிருக்கலாம்.[5] இருந்தாலும், எஜமானர் கூறியதை அவர் செய்தார்.

இந்தக் கீழ்ப்படிதலுக்குக் கர்த்தர் எவ்வாறு வெகுமதி அளித்தார்? வெகு சீக்கிரத்திலேயே பேதுரு [வலையின்] கயிறுகளில் ஒரு இழுவையை உணர்ந்தார். அவரும் அவரது உதவியாளர்களும் மீன்களால் நிறைந்திருந்த வலைகளை இழுக்கத் தொடங்கினார்கள். மீன்கள் வலைகளுக்குள் குவிந்தன, அவற்றின் வால்கள் தண்ணீரை அடித்துக் கொண்டிருந்தன. அந்த மனிதர்கள் வலைகளைப் படகினுள் இழுத்துப் போட கடுமையாக முயற்சி செய்து கொண்டிருக்கையில், பின்னப்பட்டிருந்த வலைகள் கிழிந்து போகத் தொடங்கின. அவர்கள், வந்து உதவும்படி கரையிலிருந்த தங்கள் கூட்டாளிகளை நோக்கி பெரும் பீதியுடன் சைகை காண்பித்தார்கள்.

யாக்கோபுவும் யோவானும் தங்கள் மீன்பிடிப் படகுகளுடன் வந்து சேர்ந்தார்கள். விரைவிலேயே இரு படகுகளும் "தொப்" என்று விழுந்து நழுவிச் செல்லும் மீன்களால் நிறைந்தது - இரு படகுகளும் மூழ்கிவிடும் என்ற அபாயத்திலிருக்கும் அளவுக்கு மீன்கள் நிறைந்தன.[6] இவைகள் நமக்குப் பரிச்சயமான பத்து முதல் பதினைந்து அடிகள் வரையிலான பயணப்படகுகள் அல்ல. இவைகள் கலிலேயாக் கடலில் பயன்படுத்தப் பட்ட இருபது முதல் முப்பது அடிகள் வரையிலான தொழில் முறை மீன்பிடிப் படகுகளாயிருந்தன. பயிற்சி பெற்ற மீனவர்கள், ஒருக்காலும் இப்படிப்பட்ட மீன்பாட்டைக் கண்டிருந்ததில்லை!

பேதுருவுக்கும் பிற மீனவர்களுக்கும் இது என்ன ஒரு வெளிப்பாடாக இருந்திருக்க வேண்டும்! மீன்பிடித்தல் என்பது பேசப்படும் தலைப்பாக இருக்கும்போது கூட, நமது கர்த்தர் தாம் என்ன பேசுகின்றோம் என்பதை அறிகின்றார்!

பெரும்பாலான வேளைகளில், கர்த்தருடைய கட்டளைகள் நமக்குக் கருத்தறிவை ஏற்படுத்துகின்றன, ஆனால் விஷயம் எப்போதுமே இவ்வாறு இருக்கும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை.[7] "இது எனக்கு அறிவுப்பூர்வமானதாக உள்ளதா?" என்பது கேள்வியாக இருப்பதில்லை. "இது நான் செய்யும்படிக்குக் கிறிஸ்து என்னிடத்தில் கேட்டுக்கொண்டதாக

*உள்ளதா?'' என்பதே கேள்வியாக உள்ளது. அப்படியென்றால், நாம் பேதுருவைப் போல் பதில் அளிப்போமாக: "நீர் கூறுகின்றபடி நான் செய்வேன்." நாம் கீழ்ப்படிந்தால், முடிவில் கர்த்தருடைய வழி சரியானதாக உள்ளது என்பதை நாம் காண்போம்!*

*நீங்கள் இயேசுவின் சீஷராயிருந்தால், அவர் ஒவ்வொன்றிற்கும் எஜமானராக இருக்கின்றார் என்பதில் நீங்கள் இணக்கம் கொண்டு - அந்த விசுவாசத்தின்பேரில் நீங்கள் செயல்பட வேண்டும்.*

## நீங்கள் சிலவற்றை ஒப்புக்கொள்ள வேண்டும் (வ. 8-10அ)

*இயேசு மனதில் பதியும் சில அற்புதங்கள் செய்திருந்ததைப் பேதுரு கண்டிருந்தார். அவர் தண்ணீரைத் திராட்சரசமாக்கியதைப் பேதுரு கண்டிருந்தார் (யோவா. 2:1-11). இயேசு ராஜாவின் மனிதர் ஒருவரின் மகனைக் குணமாக்கியதைப் பேதுரு கண்டிருந்தார் (யோவா. 4:46-54). கிறிஸ்து மற்ற பல அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்தபோது அதைக் காண பேதுரு அங்கிருந்தார் (யோவா. 2:23; 3:2 ஆகிய வசனங் களைக் காணவும்), ஆனால் இந்த அற்புதம் பேதுருவைப் பாதித்தது போல் வேறு எந்த அற்புதமும் அவரைப் பாதித்திருந்ததில்லை. இது சீமோனின் தொழிலை உள்ளடக்கியிருந்தது; இது அவர் வாழ்ந்த வழிமுறையை நோக்கியதாக இருந்தது. இது இயேசுவே எல்லாவற்றிற்கும் கர்த்தராக இருக்கின்றார் என்று அவர் [பேதுரு] காண்பதற்குக் காரணமாயிற்று.*

*பேதுரு இயேசுவை ஒரு புதிய வெளிச்சத்தில் காண்கையில், அவர் தம்மையும் ஒரு புதிய வெளிச்சத்தில் கண்டார். அவர் திடீரென்று தமது குறைபாடுகளினால் மூழ்கடிக்கப்பட்டார். "அவர் இயேசுவின் பாதத்தில் விழுந்து'' - துடித்துக் கொண்டிருக்கும் மீன் குவியலின்மீது விழுந்து- "ஆண்டவரே, நான் பாவியான மனுஷன், நீர் என்னைவிட்டுப் போக வேண்டும்" என்று கூறினார் (வ. 8). அவர் தேவனுடைய வல்லமையையும் மகிமையையும் திடீரென்று எதிர்கொள்ளுகின்ற மக்கள் எப்பொழுதும் பதில்செயல் செய்வது போன்றே பதில்செயல் செய்தார் (ஆதி. 18:27; யோபு. 42:4; ஏசா. 6:5).*

*நீங்கள் இயேசுவின் சீஷராயிருந்தால், நீங்கள் இரு சத்தியங்களை ஒப்புக்கொள்ள வேண்டும்: முதலாவது, அவர் எல்லாமுமாக இருக்கின்றார் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். பேதுரு தமது பாவம் நிறைந்த தன்மையை அறிக்கையிட்டபோது, இயேசுவை எவ்வாறு விளித்தார்/ அழைத்தார் என்று கண்ணோக்குங்கள்: அவர் இயேசுவை "ஆண்டவரே" என்று அழைத்தார். நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால், "கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கை செய்ய வேண்டும்" என்று பவுல் கூறினார் (ரோமர் 10:9). இரண்டாவது, அவர் எல்லாமுமாக இருக்கின்றார் என்று நீங்கள் அறிக்கையிடுகையில், நீங்கள் ஒன்றுமில்லை என்று நீங்கள் ஒப்புக்கொள்ளுகின்றீர்கள். அவர் உங்களுக்குத் தேவை என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும்.*

*"தன்னையே நிரம்பப் பெற்றுள்ள" ஒரு மனிதர்,[8] கர்த்தருக்கு இடம் ஒன்றையும் கொண்டிருப்பது இல்லை. "ஆண்டவரே, நான் எவ்வளவு நல்லவன் என்று பாரும்! நான் எவ்வளவு விவேகியாக இருக்கின்றேன் என்று பாரும்! நான் எவ்வளவு திறமைசாலியாக, எவ்வளவு வெற்றிகரமானவனாக இருக்கிறேன் என்று பாரும்! நான் எவ்வளவு சாதிக்க முடியும் என்பதை நீர் பாராட்டுவீர் என்று நான் நம்புகின்றேன்!'' என்று கூறுகின்றவர்களை இயேசு பயன்படுத்த இயலாது. கிறிஸ்துவின் பாதத்தில் விழுந்து, தங்கள் பலவீனங்களையும் அவர்மீது தாங்கள் சார்ந்திருத்தலையும் ஒப்புக் கொள்ளுகின்றவர்களையே அவரால் பயன்படுத்த முடியும். இன்னொருவரின் வார்த்தைகளைக் கடன் வாங்க வேண்டுமென்றால், நீங்கள், "தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" (லூக். 18:13) என்று கூறத் தயாராக இருக்க வேண்டும்.*

## *நீங்கள் சிலவற்றை மாற்ற வேண்டும் (வ. 10ஆ)*

*பேதுரு தம்மையும் இயேசுவையும் பிரித்த கணவாயைக் கண்டபோது, ''நீர் என்னைவிட்டுப் போகவேண்டும்'' என்று கூறினார் (வ. 8). அதிர்ஷ்டவசமாக, அவரது வேண்டுகோளுக்கு இயேசு இணங்கவில்லை. மாறாக, இயேசு ஒரு விசேஷித்த அறைகூவலினால் பேதுருவை நெருங்கக் கொண்டு வந்தார். ''அப்பொழுது இயேசு சீமோனை நோக்கி: 'பயப்படாதே, இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய்' என்றார்"" (வ. 10ஆ). "பிடிக்கிறவன்" என்பது நிகழ்கால வினைச் சொல்லாக உள்ளது, இது தொடர்ந்து செய்யப்படும் செயலைச் சுட்டிக்காண்பிக்கிறது. இது ஒருமுறை சாதிக்கும் சாதனையல்ல, ஆனால் இது வாழ்நாள் முழுவதற்குமான தொழிலாக உள்ளது. மற்றும், ''பிடிக்கிறவன்'' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது "உயிருடன் பிடித்தல்" என்ற நேரடியான அர்த்தத்தைக் கொண்டுள்ளது.[9] அவர்கள் மனிதர்களை இயேசுவினிடத்திற்கு, "உலகத்துக்கு ஜீவனைக் கொடுக்கிற"வரிடத்திற்குக் கொண்டு வருவார்கள் (யோவா. 6:33). இந்த அழைப்பை மத்தேயு பின்வருமாறு பதிவு செய்தார்: "என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" (4:19; மாற். 1:17ஐக் காணவும்).*

*பேதுருவுக்கான அறைகூவலானது அவரது வாழ்வின்மீது மீண்டும் கவனம் செலுத்துவதாக இருந்தது. அவர் மீனுக்காக மீன் பிடித்தல் மீது கவனம் குவித்திருந்தார்; இப்பொழுது அவரது வாழ்வானது மனிதர்களைப் பிடிப்பதில் மையம் கொண்டதாயிருக்கும்.*

*ராஜ்யத்தின் விதையை (வேத வசனம்; லூக். 8:11) விதைப்பதற்கென்று இயேசு விவசாயிகளை அழைக்கின்றார்.[10] "விலையுயர்ந்த முத்தைப்" பற்றி (மத். 13:46; சுவிசேஷம்) மனிதர்களுக்குக் கூறுவதற்காக இயேசு வர்த்தகர்களை அழைக்கின்றார். இயேசு தமது வீட்டைக் (சபை; மத். 16:18; 1 தீமோ. 3:15 ஆகியவற்றைக் காணவும்) கட்டியெழுப்புவதற்காகத் தச்சர்களை அழைக்கின்றார். ஆத்துமாக்களைக் குணப்படுத்துவதற்காக*

மாபெரும் மருத்துவருடன் (யோவா. 12:40) ஊழியம் செய்வதற்காக மருத்துவர்களை அழைக்கின்றார். வாழ்வில் உங்கள் தொழில் அல்லது ஆர்வம் எதுவாயிருந்தாலும், நீங்கள் இயேசுவின் சீஷராயிருக்க வேண்டு மென்றால், உங்கள் வாழ்வு பற்றி மீண்டும் கவனம் செலுத்துதல் இருக்க வேண்டும். நீங்கள் உங்கள் வாழ்வின் மையத்தை மாற்றும்போது, வலியுறுத்தங்கள் மற்றும் முன்னுரிமைகள் ஆகியவற்றிலும் மாற்றங்கள் இருக்கும்.

என் நண்பராகிய ஒருவர், ஃப்ளாயிட் ஸ்க்யூபெர்ட் அவர்கள், பள்ளிகளுக்குப் பொருட்கள் வழங்கும் நிறுவனம் ஒன்றை வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருந்தார். அவரது எழுது மேசையின்மீது, அவர் பின்வரும் எழுத்துப் பலகையொன்றைக் கொண்டிருந்தார்: "தேவனுக்கு ஊழியம் செய்தல் என்பதே என் வர்த்தகமாக உள்ளது. நான் எனது பற்றுச் சீட்டுகளுக்குப் பணம் செலுத்துவதற்காகப் பென்சில்கள் விற்கின்றேன்."

## நீங்கள் சிலவற்றை விட்டுக் கொடுக்க வேண்டும் (வ. 11)

நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி, பேதுரு இதற்கு முன்பு இயேசுவுடன் பயணம் செய்திருந்தார். அவரது நண்பர்களும் அவ்வாறே செய்திருந்தார்கள். இப்போது இயேசு அவர்களை சீஷத்துவத்தின் ஒரு புதிய மட்டத்திற்கு அழைத்துக் கொண்டிருந்தார்: இது, அவரை முழுநேரமும் பின்பற்றுதல் என்பதாக இருந்தது.[11] அவர்கள் இதைச் செய்வதற்கு, தங்கள் படகுகளையும், வலைகளையும், மீன்களையும் விட்டுவிட வேண்டியதாக இருந்தது. அவர்கள் தங்களுக்கு மிகவும் முக்கியமானவைகளாக இருந்தவைகளை விட்டுவிட வேண்டியதாக இருந்தது. அவர்கள் நிலையான ஒரு வருமானத்தையும் நிதிநிலை ரீதியாகப் பாதுகாப்பையும் கைவிட வேண்டியிருந்தது.

ஒவ்வொரு குறிப்பின்படியாகவும், அந்த மனிதர்கள் மதிப்பிற்குரிய விகிதாச்சாரங்களைக் கொண்ட மீன்பிடித்து விற்கும் வர்த்தகத்தைக் கொண்டிருந்தார்கள். அந்தக் கூட்டாளிகள் ஒன்றுக்கு மேற்பட்ட படகுகளைக் கொண்டிருந்தார்கள் என்று நாம் ஏற்கனவே கண்டோம். யாக்கோபுவும் யோவானும், கூலி வேலைக்காரர்களை அமர்த்திக் கொண்டிருந்தார்கள் (மாற். 1:20). யாக்கோபு, யோவான் ஆகியோரின் தாய், பிற்பாடு இயேசுவையும் அவரது சீஷர்களையும் பொருளாதார ரீதியாக ஆதரித்த பெண்களில் ஒருவராக இருந்தார் (மத். 27:55, 56; லூக். 8:3). யோவான் பிரதான ஆசாரியரால் அறியப்பட்டிருந்தார் (யோவா. 18:15); அவரும் அவரது குடும்பத்தாரும் அநேகமாக அந்த மார்க்க அதிகாரிகளுடன் வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்திருக்கலாம். இப்போது, மிக உயர்வான ஆதாயம் தரக்கூடிய அந்த வர்த்தகத்தைப் பின்விட்டுச் செல்ல வேண்டியதாக இருந்தது.

இது அதிகமானவற்றைக் கேட்பதாக இருந்தது - ஆனால் அந்த மனிதர்கள் இது அதிகமானவற்றைக் கேட்கவில்லையென்று நினைத்தார்கள் என்பது தெளிவு. வசனம் 11ல் நாம், "அவர்கள் படவுகளைக் கரையில்

கொண்டு போய் நிறுத்தி, எல்லாவற்றையும் விட்டு, அவருக்குப் பின் சென்றார்கள்" என்று வாசிக்கின்றோம். பேதுருவும் அவரது சகோதரரான அந்திரேயாவும் "உடனே அவர்கள் தங்கள் வலைகளை விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்" என்றும் (1:18) யாக்கோபுவும் யோவானும் "தங்கள் தகப்பனாகிய செபெதேயுவைக் கூலியாட்களோடு படவிலே விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்'' (வ. 20) என்றும் மாற்கு நமக்குக் கூறுகின்றார்.

சிலர், "ஆனால் கர்த்தர் அதனை ஒவ்வொரு சீஷரிடத்திலும் கேட்ப தில்லை என்பது நிச்சயம்" என்று மறுப்பதை நான் கேட்டிருக்கின்றேன். லூக்கா 14ல் இயேசு தம்மைப் பின்பற்ற இருந்தவர்களின் குழு ஒன்றை நோக்கி, "உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்து விடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்க மாட்டான்" (வ. 33) என்று கூறினார். பிரசங்கியார்களின் பயிற்சிப் பள்ளிகள் பலவற்றில் பணியாற்றியுள்ள நான், பல மனிதர்கள் இலாபகரமான வியாபாரங்கள் மற்றும் உயர்ந்த ஊதியம் அளிக்கின்ற வேலைகள் ஆகியவற்றை விட்டு விட்டதையும் - தேவனுடைய வசனத்தைப் போதிப்பதும் பிரசங்கிப்பதும் எப்படி என்று கற்றுக்கொள்வதற்காகத் தாங்கள் கொண்டிருந்த எல்லாவற்றையும் விற்றுவிட்டதையும் அறிந்துள்ளேன்.

மறுப்பாளர்கள், "ஆனால் முழு நேரப் பிரசங்கியார்களாக இருக்கத் திட்டமிடாதவர்கள் பற்றிய விஷயம் என்ன?" என்றும் கேட்கின்றார்கள். அப்போதும் நீங்கள் "சிலவற்றை விட்டுவிட" மனவிருப்பமாக இருக்க வேண்டும்: உங்களுக்கும் கர்த்தருக்கும் முழு இருதயத்தோடும் ஊழியம் செய்வதற்கும் இடையில் உள்ள எதையும் நீங்கள் விட்டுவிடுவது அவசியமாக உள்ளது.[12] மத்தேயு 16:24ல் இயேசு, "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்'' என்று வலியுறுத்தினார்.

என்ன நேர்ந்தாலும் உங்களைப் பராமரிப்பதற்கு கர்த்தர்மேல் நம்பிக்கை வைக்க நீங்கள் மனவிருப்பமாக இருக்க வேண்டும். பேதுரு, அந்திரேயா, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோர் கலிலேயாக் கடலில் இருந்து விலகி, இயேசுவைப் பின்பற்றிச் செல்லுகையில், அவர்கள் தங்களுக்கு அவர் மீன்பிடிப்பு ஒன்றை அளித்தது போன்றே தங்களின் தேவைகளையும் கவனிப்பார் என்று நம்பிக்கை வைத்தார்கள். சில வேளைகளில் நாம் கர்த்தரில் நம்பிக்கை வைக்க வேண்டிய விதத்தில் வைப்பதில்லை. மனிதர்கள், "நான் கிறிஸ்தவனாகும் முன்பு வியாபாரம் செய்தது போல் [இப்போதும் வியாபாரம்] செய்வதை விட்டுவிட்டால், நான் பிழைப்பதற்கு வழியேதும் இராது! என் குடும்பம் பட்டினி கிடக்கும்" என்று கூறுகின்றதை நான் அறிகின்றேன். நாம் இயேசுவையும் அவரது மார்க்கத்தையும் முதலிடத்தில் வைத்தால், நமக்கு வாழ்வின் தேவைகள் யாவும் கிடைக்கும் என்று அவர் வாக்குத்தத்தம் கொடுத்துள்ளார் (மத். 6:33). பவுல், ''என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்கு

வார்" என்று எழுதினார் (பிலி. 4:19).[13]

ஒருமுறை பேதுரு இயேசுவிடம், "இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே" என்று சொல்லத் தொடங்கினார் (மாற். 10:28). பின்பு இயேசு அவருக்குப் பின்வரும் உறுதிப்பாட்டைக் கொடுத்தார்:

> என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும், வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனும், இப்பொழுது இம்மையிலே, துன்பங்களோடேகூட நூறத்தனையாக, வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமையிலே நித்தியஜீவனையும் அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகின்றேன் (வ. 29, 30).

கிறிஸ்துவின் சீஷராயிருப்பதற்காக நீங்கள் எதை விட்டுக் கொடுத்தாலும், நீங்கள் ஒருக்காலும் கர்த்தருக்கு அதிகமானவற்றைக் கொடுத்து விட முடியாது.

## நீங்கள் சிலவற்றைச் செய்ய வேண்டும் (வ. 11)

இயேசுவின் சீஷராயிருப்பதற்கு கடைசியான ஒரு தேவை பற்றி நாம் குறிப்பிடுதல் அவசியமாக உள்ளது. இந்தத் தெளிவான தேவையானது "சீஷர்" என்ற வார்த்தையில் மறைமுகமாய் உணர்த்தப்பட்டு இருக்கிறது, இதை நாம் ஏற்கனவே வேத பாடப் பகுதியில் கண்டுள்ளோம் - ஆனால் இது குறிப்பிடப்பட வேண்டும்: நீங்கள் சிலவற்றைச் செய்ய வேண்டும். குறிப்பாக, நீங்கள் அவரைப் பின்பற்ற வேண்டும். பேதுருவும் மற்றவர்களும் "எல்லாவற்றையும் விட்டு அவருக்குப் பின்சென்றார்கள்" (வ. 11) என்று நமது வேத பாடப் பகுதி கூறுகிறது. மத்தேயுவும், மாற்குவும், அந்த நான்கு மனிதர்களும் தங்கள் படகுகளையும் வலைகளையும் விட்டு "அவருக்குப் பின்சென்றார்கள்" என்பதை வலியுறுத்தினார்கள் (மத். 4:20, 22; மாற். 1:18, 20) இயேசு, "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் ... தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" என்று கூறினார் (மத். 16:24).

இயேசுவைப் பின்பற்றுதல் என்பது பேதுருவுக்கும் அவருடன் இருந்த மற்ற மூவருக்கும் சுலபமானதாக இருக்கவில்லை. அந்த சீஷர்கள், வலுக்குன்றுதல், விரோதம், மற்றும் கடைசியில் இயேசுவைப் பின்பற்றியதற்காக மரணம் ஆகியவற்றை அனுபவித்தார்கள். ஆகிலும், அவர்கள் ஒரு உறுதிப்பாட்டை மேற்கொண்டார்கள். அவர்கள் கிறிஸ்து விரும்பிய இடங்களுக்கெல்லாம் அவரைப் பின்பற்றிச் சென்றார்கள்.[14]

உங்களில் சிலர் இன்னும் இயேசுவின் சீஷர்களாகாது இருக்கலாம். நீங்கள் இயேசுவை உங்களுக்காக மரித்தவர், உங்கள் பாவங்களில் இருந்து உங்களை இரட்சிக்க வல்லவர் என்ற வகையில் விசுவாசித்தல் அவசியமாக

*உள்ளது. (நானல்ல ஆனால்) கிறிஸ்து, "... நானே அவர் [மேசியா] என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்" என்று கூறினார் (யோவா. 8:24). இரட்சிக்கப்படுவதற்கு, விசுவாசித்து ஞானஸ்நானம் (தண்ணீரில் முழுக்காட்டப்படுதல்) பெற வேண்டும் என்பது (என்னுடையதல்ல ஆனால்) எஜமானருடைய கட்டளையாக உள்ளது (மாற். 16:16; மத். 28:18ஐக் காணவும்). நீங்கள் கிறிஸ்தவரான உடன், பின்பு நீங்கள் உங்கள் வாழ்வு முழுவதிலும் அவரைப் பின்பற்ற வேண்டியது அவசியமாக உள்ளது. அவர், "நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார்" (1 பேது. 2:21). இது எப்பொழுதுமே சுலபமாயிராது (அப். 14:22), ஆனால் இது அவரது சீஷராயிருப்பதற்கு "குறைந்தபட்ச தேவையாக" உள்ளது!*

## *முடிவுரை*

*சீஷத்துவத்திற்கான பல தகுதிகளை நாம் கண்டோம்.*

*நாம் சிலவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டும்: நாம் வசனத்தின் மாணவர்களாக இருக்க வேண்டும்.*

*நாம் சிலவற்றைப் புரிந்துகொள்ள வேண்டும்: இயேசுவே நமது வாழ்வின் எஜமானராக இருக்கின்றார் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.*

*நாம் சிலவற்றை ஒப்புக்கொள்ள வேண்டும்: நமது சொந்த போதுமற்ற தன்மைகளையும் கிறிஸ்துவை நாம் சார்ந்திருக்க வேண்டியதையும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.*

*நாம் சிலவற்றை மாற்ற வேண்டும்: நாம் நமது வாழ்வின் கவனம் செலுத்துதலை மாற்ற வேண்டும். நாம் ஆண்டவரை மகிமைப்படுத்துவதற்காகவும் மற்றவர்களை ஆண்டவருக்குள் கொண்டு வருவதற்காகவும் வாழ வேண்டும்.*

*நாம் சிலவற்றை விட்டுக் கொடுக்க வேண்டும்: நம்மை முழு இருதயத்துடன் ஊழியம் செய்ய விடாத எந்த ஒரு விஷயத்தையும் விட்டுவிட நாம் மனவிருப்பமுள்ளவர்களாக இருக்க வேண்டும், மற்றும் ஆண்டவரை நம்பியிருக்கத் தயாராக இருக்க வேண்டும்.*

*நாம் சிலவற்றைச் செய்ய வேண்டும்: நாம் எங்கெல்லாம் செல்ல வேண்டும் என்று இயேசு விரும்புகின்றாரோ, அங்கெல்லாம் அவரைப் பின்பற்றத் தயாராக இருக்க வேண்டும்.*

*சீஷராவதற்குத் தேவையானவற்றை நீங்கள் கொண்டிருக்கின்றீர்களா?*[1]

---

குறிப்புகள்

[1]*கிரேக்க வார்த்தையானது, "கற்றுக்கொள்ளுதல்" என்பதற்கான ஒரு வார்த்தை வடிவத்துடன் மிஸவி என்ற முடிவுப்பகுதி கொண்டுள்ளது. இது, [கற்றுக்கொள்ளும்]*

“ஒருவர்” என்பதைச் சுட்டிக் காண்பிக்கிறது. [2]நீங்கள் விரும்பினால், “சீஷராயிருத்தல் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது என்று கற்றுக் கொள்வதற்கு நாம் பல்வேறு வேத வசனப் பகுதிகளைக் காண முடியும்’’ என்று கூறலாம். முந்திய பாராவில் பட்டியலிடப்பட்ட வேத வசனங்கள் சிலவற்றை - மற்றும் அத்துடன், யோவான் 13:35, யோவான் 15:8 போன்ற வேத வசனப்பகுதிகளை - நீங்கள் வாசிக்கலாம் அல்லது மேற்கோள் காண்பிக்கலாம். பின்பு நீங்கள், “ஆயினும் நமது பாடத்திற்காக நாம் லூக்கா 5:1-11ன் மீது கவனம் செலுத்துவோம்” என்று கூடுதலாகக் கூறலாம். [3]லூக்கா சுவிசேஷத்தில் “கெனசெரேத் கடல்’’ என்றுள்ளது, இது கலிலேயாக் கடலுக்கிருந்த இன்னொரு பெயர் ஆகும். “கலிலேயாக் கடல்” என்ற துணைப் பாடத்தில் காணவும். [4]அந்த வார்த்தையானது இயேசுவை அழைப்பதற்கு வசனம் 8ல் பயன் படுத்தப்படுகிறது. [5]கடலில் நூற்றுக்கணக்கான மீனவர்கள் மீன் பிடித்தார்கள். [6]படகுகள் “அமிழத்தக்கதாக” என்று வசனம் 7, கூறுகிறது, ஆனால் அவைகள் உண்மையில் அமிழவில்லை என்பது உறுதி. ஒருவேளை, மீனவர்கள் பாரத்தை மறுபகிர்வு செய்யவோ அல்லது வேறு ஏதாவது ஏற்பாடுகள் செய்யவோ வேண்டியிருந்திருக்கும். [7]கருத்தறிவு எதையும் ஏற்படுத்தியிருந்திராத தெய்வீகக் கட்டளைகளுக்கான சில உதாரணங்களைக் கொடுக்க நீங்கள் விரும்பலாம்: உதாரணமாக, எரிகோவின் மதில்களைச் சுற்றி அணிவகுத்து நடத்தல் அல்லது யோர்தான் நதியில் ஏழுதரம் மூழ்குதல். சிலருக்கு, முழுக்காட்டுதல் என்ற வகையில் ஞானஸ்நானம் அல்லது கர்த்தருடைய பந்தியில் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் பங்குபெறுதல் என்பவை தர்க்கப் பொருத்தமற்றவைகளாகக் காணப்படுகின்றன. [8]‘‘தன்னையே நிரம்பப் பெற்றுள்ளவர்’’ என்பது, “மேட்டிமையினால் நிறைந்தவர்” என்று அர்த்தப்படுகிற ஒரு சொற்றொடராக உள்ளது. இது சுயவிளக்கம் கொண்டதாயிருக்கையில், நீங்கள் வாழ்கின்ற பகுதியில் இதே போன்று பயன்படுத்தப்படும் சொற்றொடர் ஒன்றை நீங்கள் விரும்பினால் பயன்படுத்தலாம். [9]எனது இருமொழி வேதாகமப் பிரதியில் கிரேக்க மொழியின் பின்வரும் நேரடியான மொழிபெயர்ப்பு உள்ளது: “நீ உயிருள்ள மனிதர்களைப் பிடிப்பாய்.’’ [10]உலகில் நான் வாழ்கின்ற பகுதியில் உள்ள பொதுவான பல தொழில்களை நான் பட்டியலிட்டுள்ளேன். உலகில் நீங்கள் வாழும் பகுதியில் உள்ள தொழில்களுக் கேற்ப இதைத் தழுவியமைத்துக் கொள்ளுங்கள்.

[11]சீஷத்துவத்தின் மூன்று படிநிலைகள் பற்றிய கலந்துரையாடலை, “கலிலேயாவுக்கு வடக்கில்” என்ற முந்திய பாடத்தில் காணவும். [12]நீங்கள் மத்தேயு 18:8, 9ன் பலமான போதனையை இவ்விடத்தில் இடைச் செருக விரும்பலாம் (மத். 5:29, 30ஐயும் காணவும்). இந்த வசனப்பகுதியானது சுய-சேதாரத்தைப் போதிப்பதில்லை, ஆனால் அதற்கு மாறாக நீங்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போகக் காரணமான எதையும் ‘‘வெட்டி விடுதல்’’ (விட்டு விடுதல்) என்பதின் அவசியம் பற்றிய கொள்கையைப் போதிக்கிறது. [13]நான் இந்த வரிகளை எழுதுகையிலும் கூட, பிற நாடுகளில் உள்ள சில கிறிஸ்தவர்களைப் போல் நான் ஒருக்காலும் சோதிக்கப்பட்டதில்லை என்பதை அறிந்திருக்கின்றேன். அவர்கள் இயேசுவைப் பின்பற்றுவதற்கு உண்மையிலேயே தங்களுக்கு விலையேறப் பெற்றவைகளாய் இருந்த ஒவ்வொன்றையும் விட்டுக் கொடுக்க வேண்டியிருந்துள்ளது. அவர்கள் இயேசுவின் சீஷராயிருப்பதற்காக ஏழ்மை மற்றும் அல்லது பட்டினியின் விளிம்பில் வாழ்கின்றார்கள். எனது இருதயம் இவற்றைக் குறித்துக் கலங்குகிறது, நான் “எஞ்சியுள்ள எங்களுக்கு நல்ல உதாரணத்தை அமைத்துள்ளதற்காகத் தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்” என்று மட்டுமே கூறமுடியும். [14]அப்போஸ்தலர்களின் பலவீனங்கள் மற்றும் இயேசுவைப் பின்பற்றுவதில் உள்ளடங்கியிருந்த யாவற்றையும் குறித்த அவர்களின் புரிந்துகொள்ளுதலில் அவர்கள் வளர

வேண்டியிருந்தது பற்றி நான் அறிந்துள்ளேன். ஆயினும், இந்த வாக்கியத்தில் எடுத்துரைக்கப்பட்டதே முடிவு விளைவாயிருந்தது. [15]நீங்கள் இந்தப் பிரசங்கத்தைப் பயன்படுத்தும்போது, உங்கள் உரையைக் கேட்பவர்கள் தங்களைச் சீஷர்களாகத் தகுதிப்படுத்திக் கொள்வதற்கு தேவையான எல்லாவற்றையும் செய்யும்படி உற்சாகமூட்டுங்கள். கடைசி பிரதான கருத்தில் உள்ள நிறைவுப் பாராவை விரிவாக்குங்கள்.